வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 12.8.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

விவசாயிகளின் நலனில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை 11 கோடிக்கும் அதிகமான மக்கள் போதை பொருள் பழக்கத்திற்கு எதிரான இயக்கத்தில் இணைந்துள்ளனர் என்று மத்திய அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

கொள்கைகளை வகுப்பதிலும் திட்டங்களை வடிவமைப்பதிலும் கவனம் செலுத்தப்படும் என்று மத்திய புள்ளியியல் துறை இணை அமைச்சர் திரு ராவ் இந்தர் ஜித் சிங் கூறி உள்ளார்

புதுச்சேரியில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் நோயாளிகளின் சிகிச்சைக்கு 5 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி அளிக்கப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி சட்டப் பேரவையில் கூறி உள்ளார்.

15 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச மகளிர் கபடி போட்டிகள் அடுத்த மாதம் அரியானா மாநிலத்தில் தொடங்குகின்றன.

வேளாண்

விவசாயிகளின் நலனில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் விவசாயிகளுடனான தனது சந்திப்பு மறக்க முடியாத அனுபவம் என்று கூறி உள்ளார். வேளாண் துறையில் ஆராய்ச்சி மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளின் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார். புதுடெல்லி பூசா வேளாண் பல்கலைக் கழகத்தில் 109-புதிய ரக பயிர்களை வெளியிட்ட பிரதமர், விவசாயிகளிடையே கலந்துரையாடினார்.

வேளாண் துறையில் படைப்பாற்றல் திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதன் பயனாக இந்த அதிக மகசூல் தரும் புதிய ரக பயிர்கள் உருவாக்கப்பட்டதாக பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்தார். விவசாயிகள் இந்த புதிய ரக பயிர்களை முதலில் சிறிய அளவில் பயன்படுத்தி, அவை திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் தொடர்ந்து பயன்படுத்த பிரதமர் அறிவுறுத்தினார். விவசாயிகளின்

வாழ்வாதார மேம்பாடு, மற்றும் இயற்கை வேளாண்மை மூலம், புவிசார் நலத்தில் அவர்கள் பொறுப்புகளை உணர்ந்து, விவசாயத்தில் ஈடுபடுவார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

*யானைகள் தினம் -பிரதமர்*

உலக யானைகள் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி யானைகள் இந்திய நாட்டின் வரலாறு மற்றும் கலாச்சாரத்துடன் இணைந்து இருப்பதாக கூறினார். யானைகளை பாதுகாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்த பிரதமர், யானைகளின் வாழ்விடங்களான வனப் பகுதிகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார். கடந்த சில ஆண்டுகளில் யானைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.மேலும் உலக யானைகள் தினத்தை ஒட்டி, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் வெளியிட்டுள்ள செய்தியில் ஆசியா கண்டத்தில் உள்ள மொத்த யானைகளின் எண்ணிக்கையில் 60

சதவிகிதம் இந்தியாவில் உள்ளதாக சுட்டிக் காட்டினார். கடந்த 10 ஆண்டுகளில் யானைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்துள்ளதாகவும், உலக யானைகள் தினத்தை பெருமையுடன் கொண்டாடுவோம் என்றும் திரு பூபேந்திர யாதவ் கூறினார்.

*போதை பொருள்- உறுதி மொழி*

நாட்டில் இதுவரை 11 கோடிக்கும் அதிகமான மக்கள் போதை பொருள் பழக்கத்திற்கு எதிரான இயக்கத்தில் இணைந்துள்ளனர் என்று மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார். இன்று நாடு முழுவதும் போதைப் பழக்கத்திற்கு எதிராக உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியில் காணொளி வாயிலாக அவர் கலந்து கொண்டார். இந்த ஆண்டின் கருப்பொருள் போதைப் பொருள் பயன்பாடு இல்லாத-வளர்ச்சி அடைந்த பாரதம் என்பதாகும்.

மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள், மத்திய அமைச்சகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள்,

தேசிய மாணவர் படை, நேரு யுவகேந்திரா சங்கதன் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த 11 கோடிக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சியில் காணொளி வாயிலாக பங்கேற்றுள்ளனர் என்று டாக்டர் வீரேந்திர குமார் கூறினார்.

இந்த இயக்கம் 2020-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் தேதி சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், கடந்த ஆண்டு முதல் நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த இயக்கம் செயல்பட்டு வருவதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*புள்ளியியல்-மெயில்*

இந்திய புள்ளியியல் அமைப்பின் செயல்திறனை கூட்டு அணுகுமுறையில் மேம்படுத்துவதற்காக மத்திய-மாநில புள்ளியியல் அமைப்புகளின் 28-ஆவது மாநாடு இன்று புதுடெல்லி ஜன்பத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கார் சர்வதேச மையத்தில் தொடங்கியது. இம்மாநாட்டை மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை இணை அமைச்சர் திரு ராவ் இந்தர் ஜித் சிங் தொடக்கி வைத்தார். நாளை நிறைவடைய உள்ள இம்மாநாட்டில் மத்திய அமைச்சகங்கள் மற்றும்

துறைகள், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் பிரதிநிதிகள், உலக வங்கி, ஐக்கிய நாடுகள் சபையின் முகமைகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் பங்கேற்க உள்ளன.

இந்த மாநாட்டின் கருப்பொருள், முடிவு எடுப்பதற்கு தரவுகளை பயன்படுத்துதல், மாநில புள்ளியியல் அமைப்புகளை வலுப்படுத்துதல் என்பதாகும். மேலும் புள்ளியியல் சார்ந்த கருத்து பரிமாற்றம், சிறந்த நடைமுறைகள், பொதுவான நலன் சார்ந்த பிரச்சனைகள் ஆகியவை குறித்து விவாதிக்கப்படுகின்றன.

இந்தியாவில் பெண்கள், ஆண்கள்-2023 என்ற 25-ஆவது இதழ் இன்று நடைபெற்ற மாநாட்டின் தொடக்க விழாவில் வெளியிடப்பட்டது. அப்போது பேசிய திரு ராவ் இந்தர் ஜித் சிங், நிர்வாக செயல்பாட்டில் தரவுகளின் தரம், நேரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான முறையை எவ்வாறு

முன்னெடுத்து செல்ல முடியும் என்பது குறித்து விவாதங்கள் நடைபெற உள்ளதாக அவர் தெரிவித்தார்.

எல்.முருகன்

இந்திய விண்வெளி திட்டத்தின் தந்தை எனப் போற்றப்படும் விக்ரம் சாராபாய் பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், விண்வெளி ஆய்வுத் திட்டங்களில் அவரது சாதனைகள், தொலைநோக்கு பார்வை மற்றும் அரும்பணிகள் என்றென்றும் நினைவில் கொள்ளப்படும் என்று புகழாரம் சூட்டினார்.

தேசிய நூலகர் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, நூலகரும், கணித அறிஞருமான எஸ்.ஆர் ரங்கநாதனையும் திரு எல் முருகன் நினைவு கூர்ந்தார். எஸ்.ஆர் ரங்கநாதனின் பிறந்த நாள் தேசிய நூலகர் தினமாக கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய திரு எல். முருகன், புத்தகங்களைப் படிக்கும்

ஆர்வத்தை நம்மிடையே தூண்டிய அவர், என்றென்றும் போற்றத் தக்கவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*புதுச்சேரி-சட்டப் பேரவை*

புதுச்சேரி பட்ஜெட் கூட்டத் தொடரில் இன்று மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்கள் நடைபெற்றன. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் நோயாளிகளின் சிகிச்சைக்கு 5 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி அளிக்கப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி சட்டப் பேரவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையில் கூறினார். புதுச்சேரி மாநிலம், காரைக்காலில் அதிநவீன வசதிகளுடன் புதிய அரசு மருத்துவமனை கட்டப்படும் என்றும், முதலமைச்சர் கூறி உள்ளார்.

ஆயுஷ்மான் திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படவில்லை என்று எதிர்கட்சி தலைவர் திரு சிவா சட்டமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு முதலமைச்சர் இவ்வாறு பதில் அளித்தார்.

தொடர்ந்து பேசிய முதலமைச்சர், அனைத்து பள்ளிக்கூடங்களும் தூய்மையாக இருக்க வேண்டியது அவசியம் என்றும், கழிவறைகள் தூய்மையாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இதை செயல்படுத்துவதற்காக தனியார் மூலம் தூய்மை பணியாளர்கள் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

புதுச்சேரியில் ஒவ்வொரு தொகுதியிலும் சிபிஎஸ்இ பாடத் திட்டம் மூலம் கல்வி பயில விரும்பாத மாணவர்களுக்கு, தமிழ்நாடு பாடத்தின் கீழ் கல்வி பயில தொகுதி தோறும் ஒரு பள்ளி என்ற திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். இதற்கான திட்டம் தற்போது இல்லை என்று கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் பதில் அளித்தார்.

*புதுச்சேரி-டிஜிபி*

புதுச்சேரியின் புதிய காவல் துறை தலைமை இயக்குநராக திருமதி ஷாலினி சிங் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். காவல் தலைமையக வளாகத்தில் அவருக்கு காவல் அணிவகுப்பு

மரியாதை அளிக்கப்பட்டது. , துணை நிலை ஆளுநர் திரு கே கைலாஷ்நாதனை ஆளுநர் மாளிகையில், திருமதி ஷாலினி சிங் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். பின்னர் முதலமைச்சர் திரு ரங்கசாமியை சட்டப் பேரவையில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முன்னதாக காவல்துறை தலைமை இயக்குனராக இருந்த திரு சீனிவாஸ் கடந்த மாதம் பணியில் இருந்து ஓய்வுப் பெற்றதை அடுத்து புதுடெல்லியில் பணியாற்றிய திருமதி ஷாலினி சிங் புதுச்சேரி காவல் துறை தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

*மன் கி பாத்*

பிரதமர் திரு நரேந்திர மோடி, அகில இந்திய வானொலியில் மன் கி பாத் என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களிடையே உரையாற்றும் 113-ஆவது நிகழ்ச்சி வரும் 25-ஆம் தேதி காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை 1800 11 7800 என்ற கட்டணமில்லா தொலை

பேசி எண்ணிலும், my.gov இணையதளம் மூலமாகவும் பொது மக்கள் வரும் 23-ஆம் தேதி வரை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*ஹர்கர் திரங்கா*

நாட்டின் 78-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஹர்கர் திரங்கா என்னும் இல்லந்தோறும் கொடியேற்றும் இயக்கம் வரும் 15-ஆம் தேதி வரை நாடு முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. இந்த இயக்கத்தை முன்னெடுத்து செல்லும் வகையில் நாட்டின் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் தேசிய கொடி விற்பனை முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. தேசியக் கொடியுடன் கூடிய தங்களின் செல்பி படங்களையும் எடுத்து மக்கள் சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்து வருகின்றனர்.

ஜம்மு-காஷ்மீர் மக்கள் மேற்கொண்ட திரங்கா யாத்திரை ஊக்கமளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கூறி உள்ளார். இந்த இயக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா மேற்கொண்ட முன் முயற்சிகளை பிரதமர் பாராட்டி உள்ளார்.

விளையாட்டு

அரியானா மாநிலத்தில் சர்வதேச மகளிர் கபடி போட்டிகள் அடுத்த மாதம் தொடங்குகின்றன. 15 நாடுகள் இந்தப் போட்டியில் பங்கேற்க உள்ளன. சர்வதேச அளவில் கபடியை ஊக்குவிக்கவும், ஒலிம்பிக் போட்டியில் இதை சேர்க்கவும் அரசின் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்தப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர் திரு அபினவ் பிந்த்ரா சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் சார்பில் ஒலிம்பிக் ஆர்டர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார். பாரீசில் நடைபெற்ற 142-ஆவது ஐஓசி கூட்டத்தில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

விவசாயிகளின் நலனில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை 11 கோடிக்கும் அதிகமான மக்கள் போதை பொருள் பழக்கத்திற்கு எதிரான இயக்கத்தில் இணைந்துள்ளனர் என்று மத்திய அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

கொள்கைகளை வகுப்பதிலும் திட்டங்களை வடிவமைப்பதிலும் கவனம் செலுத்தப்படும் என்று மத்திய புள்ளியியல் துறை இணை அமைச்சர் திரு ராவ் இந்தர் ஜித் சிங் கூறி உள்ளார்

புதுச்சேரியில் ஆயுஷ்மான் திட்டத்தின் கீழ் நோயாளிகளின் சிகிச்சைக்கு 5 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி அளிக்கப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி சட்டப் பேரவையில் கூறி உள்ளார்.

15 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச மகளிர் கபடி போட்டிகள் அடுத்த மாதம் அரியானா மாநிலத்தில் தொடங்குகின்றன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------------------